26th March 1958]

Sri V. K. KOTHANDARAMAN : மதுரையில் சில கட்சிகள் கொடிகளை நட்டிருப்பதாக சொன்னார்கள் நண்பர் அவர்கள். அதே மதுரை நகரத்தில் காங்கிரஸ் கட்சியும் கொடிகளை நட்டிருக்கிறது. இதற்கு மாத்திரம் என் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது ?

Mr. SPEAKER : இந்த கேள்வியை அனுமதிக்கமுடியாது. கோவிந்தசாமி அவர்களுடைய கேள்விக்கே அனுமதி கொடுக்க மறுத்தேன். அப்படியிருக்கும்பொழுது இதற்கு மாத்திரம் எப்படி அனுமதி கொடுக்க முடியும் ?

Provident Fund.

* 416 *Q.*—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government have paid Provident Fund to the workers who were transferred or proposed to be transferred to the Electricity Board?

The Hon. Sri V. RAMIAH : No, Sir. It is not proposed to pay the Provident Fund amounts standing to the credit of the workers, to them consequent on their transfer to State Electricity Board. The question of transferring the balances standing to their credit to the Madras State Electricity Board which will maintain the Fund is separately under consideration.

Sri N. K. PALANISAMI : ஸார், கவர்ன்மென்டிலிருந்து போர்டுக்கு வேலைகள் எல்லாம் மாற்றப்படும்பொழுது என் பிராவிடன்ட் பண்ட் போன்றவைகளை மாற்றக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

The Hon. Sri V. RAMIAH : இவைகளையும் போர்டுக்கு கொடுக்கவேண்டுமென்றுதான் ஆலோசித்து வருகிறோம்.

Lands under cultivation.

* 417 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the extent of lands under cultivation of (1) paddy, (2) sugarcane and (3) dry crops, in the North Arcot district from 1952 to 1957 taluk-war; and

(*b*) the extent of cultivable land which remains uncultivated?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

Taluk-wise particulars regarding the extent of cultivable land which remains uncultivated in the district are not available. Hence, information furnished is for the district as a whole.

Sri A. A. RASHEED : What is the main reason for nearly five lakh acres of land remaining fallow in the North Arcot district?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The information that I have is all cultivable land that is available is under cultivation.

---

[a] Printed as Appendix II on pages 553–560 infra.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், வட ஆற்காடு ஜில்லாவில் நெல் சாகுபடி செய்யும் நிலங்கள் 6 லட்சத்து 46 ஆயிரம் எக்கர் என்றும், அதேபோன்று மற்ற மேட்டுப் பிரதேசங்களில் விவசாயம் ஆகக் கூடிய நிலங்களில் சுமார் 8½ லட்சம் எக்கர் என்றும் இருக்கிறது. அதே நேரத்தில் விவசாயத்திற்கு லாயக்காக இருக்கக்கூடிய நிலங்கள் விவசாயம் செய்யாமல் இருக்கக்கூடியது 4 லட்சத்து 76 ஆயிரம் எக்கர்கள் இதிலிருந்து அந்த ஜில்லா எவ்வளவு மோசமாக இருக்கிறது என்று தெரியும். அங்கே இருக்கக்கூடிய ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், அந்த தரிசு நிலங்களில் விவசாயம்செய்ய பட்டா செய்யவேண்டுமென்று எழுதிக்கேட்டு வந்தும் பட்டா கொடுக்காமல் இருப்பதன் காரணம் என்ன ? இனியாவது கொடுப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன். விவசாயத்திற்குத் தகுதியான நிலங்களெல்லாம் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற கணக்கு வேறு நிலங்களைப் பற்றிய கணக்கு. அதாவது மேய்கால் போன்ற நிலங்கள்.

Sri A. A. RASHEED : At page 8, the cultivable land remaining uncultivated is shown as 476,386 acres Is that correct?

The Hon. Sri C. SUBRAMANIAM : The hon. Member may see the note below the statement.

Sri K. VINAYAKAM : Regarding the cultivable land remaining uncultivated—about 476,000 acres—was any representation made by the people in the villages abutting those lands for assignment of those lands and if so, what action was taken by the Government on such representation?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I may read the note from the paper placed on the table of the House for the benefit of hon. Members who have not read it. 'It comprises cultivable waste, permanent pastures and other grazing lands, land under miscellaneous tree crops and groves not included in net area sown, current fallows, and other fallow lands.'

Ex-Services Personnel Benevolent Fund

* 418 *Q.*—**Sri P. G. MANICKAM** : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount collected on the Flag Day on 7th December 1957 for the Madras State Ex-Services Personnel Benevolent Fund; and

(*b*) the several welfare schemes for which this amount will be spent?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The answer[a] is placed on the table of the House.

Sri P. G. MANICKAM : ஸார், முன்னாள் ராணுவத்தினர் சகாய நிதிக்கு இந்த ராஜ்யத்தில் வசூல் செய்யப்பட்ட 16,379 ரூபாயில் எவ்வளவு மத்திய ப்ளாக் டே கமிட்டிக்கு அனுப்பப்பட்டது ? அந்தத் தொகையிலிருந்து நம் ராஜ்யத்திற்கு அனுப்பப்பட்ட தொகை எவ்வளவு ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதில் சில விதிகள் இருக்கின்றன. எவ்வளவு வசூல் நடக்கிறதோ அதில் 25 சத வீதம் உடனடியாக மாகாண பெனவலன்ட் பண்டுக்கும், அந்த வருஷத்திற்கு முந்திய

---

[a] Printed as Appendix III on pages 560–561 infra.